**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.42/2026
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : மதிவின் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : சக்திவேல் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

17.03.2026

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் தேரிருவேலியில் குடியிருந்து அரசு வேலைக்காக படித்துக்கொண்டிருக்கிறேன். ஆஜர் எதிரிகள் என்னுடன் கல்லூரி படித்தவர்கள் என்ற முறையில் தெரியும். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு நான் முதுகுளத்தூர் அரசு கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தபோது ஒரு நாள் மதியம் 01.00 மணியளவில் 10 நபர்கள் வரையில் சேர்ந்து வகுப்பிற்கு வந்து முதலாமாண்டு மாணவர்களுக்கு வரவேற்பு விழா நடத்த வேண்டும் என்று கூறி மாணவர்களிடம் அதற்காக பணம் கேட்டார்கள். நான் அவர்களிடம் என்னால் தரமுடியாது என்று கூறிவிட்டேன். அதில் எனக்கும், அந்த 10 நபர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அவர்களில் ஒரு நபர் கூட்டத்திற்குள் இருந்து எனது கன்னத்தில் அடித்துவிட்டார். அந்த நபர் யார் என்பதை என்னால் சரியாக பார்க்க முடியவில்லை. எனக்கு ஆதரவாக மற்ற மாணவர்களும் அங்கு கூடியிருந்ததால் நான் அந்த 10 நபர்களையும் சரியாக கவனிக்கவில்லை. ஆனால் ஆஜர் எதிரிகள் அந்த கூட்டத்திற்குள் இல்லை. பின்னர் மற்ற மாணவர்கள் வந்து சண்டையை

விலக்கிவிட்டார்கள். இது சம்மந்தமாக முதுகுளத்தூர் காவல்நிலையத்தில் சொன்னபோது போலிசார் என்னிடம் வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரில் என்ன சங்கதிகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. **புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் முதல்விசாரணையில் கூறிய சம்பவ இடத்தில் ஆஜர் எதிரிகள் மூவரும் வந்து வருடமுடிவில் விழா நடத்த பணம் கேட்டபோது நான் பிறகு தருவதாக கூறினேன் என்றாலும், எதிரிகள் மது போதையில் இருந்ததாகவும், யாரோ சிலர் எதிரிகள் மது அருந்துவதற்காக பணம் கேட்டதாக கூறியதை நானும், எனது நண்பர் ராஜகோபால் என்பவரும் கூறியதாக தவறுதலாக புரிந்துகொண்டு எவ்வாறு அப்படி கூறலாம் என்று கேட்டு ஆபாச வார்த்தைகளால் திட்டி என்னை எதிரிகள் மூவரும் கன்னத்தில் மாறி மாறி அடித்து கீழே தள்ளி மிதித்து காயம் ஏற்படுத்தியதாக புகார் மனுவிலும், போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் ஒரே கல்லூரியில் படித்தவர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.42/2026
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : சந்தோஷ்குமார் என்ற சந்தோஷ் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : கருப்பையா | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

17.03.2026

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் இளங்காக்கூர் கிராமத்தில் குடியிருந்து அரசு வேலைக்காக படித்துக்கொண்டிருக்கிறேன். அசா.1 மற்றும் ஆஜர் எதிரிகள் என்னுடன் கல்லூரி படித்தவர்கள் என்ற முறையில் தெரியும். மற்றபடி வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் சம்பவத்தை பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இருந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்து சண்டையை விலக்கியதாகவும், எதிரிகள் அசா.1 மற்றும் ராஜகோபால் என்பவரை ஆபாசமாக பேசி அவர்களில் அசா.1யை தாக்கி காயம்

ஏற்படுத்தியதையும், அசா.1 யை கொலைமிரட்டல் விடுத்ததையும் பார்த்து தெரிந்துகொண்டு போலிசார் விசாரித்தபோது கூறிவிட்டு தற்போது எதிரிகள் ஒரே கல்லூரியில் படித்தவர்கள் என்பதால் அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.